<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.</u>

**முன்னிலை: திருமதி. B. ஹரிணிபிரியா, B.A., L.L.B.,(Hons).,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.**

**2025ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 03ஆம் நாள் திங்கள் கிழமை**

**வழக்கிடை மனு எண். 178/2024**

**அசல் வழக்கு எண். 31/2014**

1.சாந்தி
2.சேகர்
3.அஞ்சுகம்
4.ஆதிமூலபடையாச்சி ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

..எதிர்..

1.சத்தியா
2.ஜீவபாரதி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது 16.04.2024ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 22.04.2024ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கண்.ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் வழக்கறிஞர் திரு.ஜி.பாலசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இம்மனுவானது 25.08.2025ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது இரு தரப்பு வாதங்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற ஆவணங்கள் ஆகிய பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக இம்மனுவில் கண்டுள்ள சாட்சிக்கு சாட்சி சம்மன் அனுப்பி பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை செய்திட வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை தொகுப்பு சட்டத்தின் கட்டளை 16 விதி 1ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

2. **மனுவின் சுருக்கம்**

**2.1** மனுதாரர் / அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி என்றும் 1, 3 பிரதிவாதிகள் தனது சகோதரிகள் என்றும் மற்ற பிரதிவாதிகளுக்காகவும் தானே வழக்கை நடத்தி வருவதாகவும் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தங்கள் மீது தாவாவில் கண்ட பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து வாதிகள் தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சிக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ளது என்றும் 1ம் வாதியின் கணவரும், 2ம் வாதியின் தகப்பனாருமான செல்வம் என்பவர் எங்கு பிறந்தார் வளர்ந்தார் என்பதை பற்றி சாட்சியமளிக்க வேண்டியது அவசியமும், நியாமாயுமிருக்கிறது. சாட்சி அபுபக்கர் என்பவர் இராமநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும் தான் வியாபாரம் செய்த கடைக்கு அருகே அவரும் வியாபாரம் செய்து வந்தார் என்றும் அவருக்கு தங்கள் குடும்பத்தைப் பற்றி நன்கு தெரியும் என்றும் இராமநத்தம் கிராமத்தைச் சார்ந்த ஹ ராஜாமொய்தீன் குமாரர் அபுபக்கர் என்பவரை சாட்சியாக விசாரிக்க அவரது விலாசத்திற்கு சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்திட உத்திரவிட வேண்டுமாய் மனுதாரர் / 2ம் பிரதிவாதி பிரார்த்திக்கிறார்.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>

3.1 இவ்வெதிர்மனுதாரரின் பேருக்கும் கண்ணியத்திற்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் மனுதாரர் மேற்படி சாட்சியாக அபுபக்கரை விசாரிக்க வேண்டி ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த வ.ம.687/2023 மனுவில் இவ்வெதிர்மனுதாரர் தரப்பில் விரிவாக எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இந்நீதிமன்றத்தாரால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதன் பேரில் யாதொரு மேல்முறையீடும் இல்லை.

3.2 இந்நிலையில் மேற்படி வ.ம.687/2023 மனுவில் குறிப்பிட்ட அதே சாட்சியை தற்போது மீண்டும் இவ்வழக்கில் விசாரிக்க வேண்டும் என மனுதாரர் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்க தக்கதல்ல.

3.3 மனுதாரர்/எதிர்வாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், தனது வாக்கு மூலத்திலும் சொல்லாத சங்கதிகளை எல்ல

4. இரு தரப்பு வாதங்கள் கேட்டக்கப்பட்டன, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.**

5.1 மனுதாரர் தரப்பு வாதம் என்னவெனில் திர்மனுதாரர்கள்/வாதிகள் தங்கள் மீது தாவாவில் கண்ட பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து வாதிகள் தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சிக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ளது என்றும் 1ம் வாதியின் கணவரும், 2ம் வாதியின் தகப்பனாருமான செல்வம் என்பவர் எங்கு பிறந்தார் வளர்ந்தார் என்பதை பற்றி சாட்சியமளிக்க வேண்டியது அவசியமும், நியாமாயுமிருக்கிறது. சாட்சி அபுபக்கர் என்பவர் இராமநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர்

என்றும் தான் வியாபாரம் செய்த கடைக்கு அருகே அவரும் வியாபாரம் செய்து வந்தார் என்றும் அவருக்கு தங்கள் குடும்பத்தைப் பற்றி நன்கு தெரியும் என்றும் இராமநத்தம் கிராமத்தைச் சார்ந்த ஹாஜாமொய்தீன் குமாரர் அபுபக்கர் என்பவரை சாட்சியாக விசாரிக்க அவரது விலாசத்திற்கு சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

5.2 எதிர்மனுதாரர் தரப்பு வாதம் என்னவெனில் இவ்வெதிர்மனுதாரரின் பேருக்கும் கண்ணியத்திற்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் மனுதாரர் மேற்படி சாட்சியாக அபுபக்கரை விசாரிக்க வேண்டி ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த வ.ம.687/2023 மனுவில் இவ்வெதிர்மனுதாரர் தரப்பில் விரிவாக எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இந்நீதிமன்றத்தாரால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதன் பேரில் யாதொரு மேல்முறையீடும் இல்லை என்றும் இந்நிலையில் மேற்படி வ.ம.687/2023 மனுவில் குறிப்பிட்ட அதே சாட்சியை தற்போது மீண்டும் இவ்வழக்கில் விசாரிக்க வேண்டும் என மனுதாரர் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்க தக்கதல்ல என்று வாதிடப்பட்டுள்ளது.

5.3 இந்நிலையில் மனுதாரர் தரப்பில் 1ம் வாதியின் கணவரும், 2ம் வாதியின் தகப்பனாருமான செல்வம் என்பவர் எங்கு பிறந்தார் வளர்ந்தார் என்பதை பற்றி சாட்சியமளிக்க வேண்டியது அவசியமும், நியாமாயுமிருக்கிறது. சாட்சி அபுபக்கர் என்பவர் இராமநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும் தான் வியாபாரம் செய்த கடைக்கு அருகே அவரும் வியாபாரம் செய்து வந்தார் என்றும் அவருக்கு தங்கள் குடும்பத்தைப் பற்றி நன்கு தெரியும் என்று கூறியுள்ள நிலையில், மேற்படி வ.ம.எண்.687/ 2023-ல் 1ம் வாதியானவர் இராமநத்தத்தில் கடை நடத்தி வந்ததும் அவர் வேறு நபருடன் குடும்பம் செய்ததும் அவருக்கு அருகாமையில் கடை நடத்தி வந்த ஹ ராஜாமொய்தீன் குமாரர் அபுபக்கர் என்பவரை சாட்சிய சம்மன் அனுப்ப வேண்டிய மனு

தள்ளுபடிச் செய்யப்பட்டுள்ள நிலையில், இம்மனுவில் 1ம் வாதியின் கணவரும், 2ம் வாதியின் தகப்பனாருமான செல்வம் என்பவர் எங்கு பிறந்தார் வளர்ந்தார் என்பதை பற்றி சாட்சியமளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ள காரணங்களில் எந்தவொரு மாற்றங்களும் காணப்படாததாலும், எதிர்வழக்குரையில் இல்லாத சங்கதிகளாலும், சாட்சிய சம்மன் அனுப்ப கோரும் இம்னுவினை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என இந்நீதமன்றம் முடிவு செய்கிறது.

6. **முடிவாக**

இம்மனு தள்ளுபடி செய்ய உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 03ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது,

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

( **ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.